முச்சந்தி முரளி



"உவையளின்ர கதையளைப் பாக்கேக்க எல்லாரும் தனித்தனியத்தான் எலக்சனில நிக்கப்போயினம் கண்டியளோ"

Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 310

செவ்வாய்க்கிழமை
01 ஒக்ரோபர் 2024

புரட்டாதி 15
வள்ளுவர் ஆண்டு

# கசப்புகளைத் தீர்த்தால் ஒன்றிணைந்து போட்டி!



## இந்தியத் தூதுவரிடம் கூறிய தமிழ்க் கட்சித் தலைவர்கள்

**கொழும்பு, ஒக்ரோபர் 1**

**தமிழ்த் தரப்புகள் ஒன்றாகப் போட்டியிடு வதானால் அவர்களிடையே உள்ள கசப்பு கள் தீர்க்கப்படவேண்டும் என்பதை இந்தியத் தூதுவருடனான நேற்றைய சந்திப்பில் பங் கேற்ற கட்சித் தலைவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.**

15

## யாழ்ப்பாணத்தில் கைக்குண்டுகளுடன் இளைஞர்கள் கைது



யாழ்ப்பாணம், ஒக். 1
யாழ்ப்பாணத்தில் கைக்குண்டுகளுடன் இரண்டு இளை ஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

15

## எரிபொருள் விலை பெருமளவு குறைப்பு



கொழும்பு, ஒக். 1
எரிபொருட்களின் விலை அநுர தலைமையி லான புதிய அரசாங்கத் தால் நேற்று முதன்முறையாக குறைக்கப்பட் டது. ஒக்ரேன் 92 பெற்றோல் 21 ரூபாவால் குறைக்கப்பட்டு 311 ரூபாவாகவும், ஓட்டோ டீசல் 24 ரூபாவால் குறைக்கப்பட்டு 283 ரூபாவாகவும், சுப்பர் டீசல் 33 ரூபாவால் குறைக்கப்

15

## அதிகாரப் பகிர்வுக்கு எதிரானவரே அநுர!

### தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இந்தியத் தூதுவரிடம் எடுத்துரைப்பு

கொழும்பு, ஒக். 1
தேசிய மக்கள் சக்தி என்று சொல்லிக்கொண்டாலும் அவர் கள் அடிப்படையில் ஜே.வி.பி.யினர்தான். அநுர உட்பட அவர்கள் அனைவரும் அதிகாரப் பகிர்வுக்கு எதிரானவர்கள். இப்போதும் அதே மன நிலையில்தான் இருக்கின்றார்கள் என்று தமிழ்க் கட்சி களின் தலைவர்கள் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவி டம் தெரிவித்துள்ளனர்.

15

## தமிழ்மக்கள் கூட்டணி தனித்துக் களமிறங்கும்

யாழ்ப்பாணம், ஒக். 1
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் க.வி.விக்னேஸ் வரன் தலைமையிலான தமிழ்மக்கள் கூட்டணி எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்தப்படவுள்ள பொதுத்தேர்தலில் தனித் துப் போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளது.

15

## தமிழரசுக் கட்சி கொழும்பிலும் போட்டி?

### ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 1
இலங்கைத் தமிழரசுக் கட்சி கொழும்பில் போட்டியிடுவது தொடர்பில் பரிசீலனையில் உள்ளதாக தமிழரசுக் கட்சி யின் மத்திய குழு உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணி யுமான கே.வி.தவராசா தெரிவித்தார்.

15

## அநுர அரசாங்கத்துக்கு எதிராக நேற்றுப் போர்!

கொழும்பு, ஒக். 1
தரம் - 5 மாணவர்களுக்கான பரீட்சையை மீண்டும் நடத் துமாறு வலியுறுத்தி, இசுருபாய கல்வி அமைச்சின் முன் பாக நேற்று ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையின் சில வினாக்கள், பரீட்சைக்கு முன்பாகவே வெளியானதையடுத்து, அவ் வாறு வெளியான மூன்று கேள்விகளுக்கான முழுப் புள்ளிகளும் மாணவர்களுக்கு வழங்கப்படும்

15

## நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசு தனித்துப்போட்டி!

### தோற்றவர்களுக்கு ஆசனம் இல்லையாம் சுமந்திரன் நேற்று இவ்வாறு அறிவிப்பு

மன்னார், ஒக். 1
வீட்டுச் சின்னத்தில் தேர்தலை ஒன்றாக எதிர்கொள்வது என்ற அழைப்பு இதர கட்சிகளால் ஏற்றுக்கொள்ளப்படாத பட் சத்தில், தமிழரசுக் கட்சி தனித்துக் களமி றங்கும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித் துள்ளார்.
கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பாக 'வீடு' சின்னத்தில் போட்டியிட்டுவிட்டுப் பின்னர் பிரிந்து சென்றவர்களை, மீண்டும்

15

## 104 கிலோ கஞ்சா மீட்பு

கிளிநொச்சி, ஒக். 1
பளைப் பகுதியில் 104 கிலோ கஞ்சாவை இரா ணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து நேற்று மீட் டுள்ளனர். சந்தேகநபர் கள் தப்பித்துச் சென் றுள்ளநிலையில், பளைப் பொலிஸாரிடம் மீட்கப் பட்ட கஞ்சா பாரப்படுத்தப் பட்டுள்ளது.

15

## தபால் வாக்களிப்புக்காக இன்றுமுதல் விண்ணப்பம்

கொழும்பு, ஒக். 1
நாடாளுமன்றத் தேர்தலில் தபால் மூலமாக வாக்களிப் புக்கு இன்றுமுதல் எதிர்வரும் 8ஆம் திகதிவரை விண்ணப் பங்கள் ஏற்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

15

## காணாமலாக்கப்பட்டோருக்காக கிளிநொச்சியில் இன்று போர்!

கிளிநொச்சி, ஒக். 1
காணாமலாக்கப்பட்டவர்களுக்கான நீதியை வலியுறுத்தி கிளிநொச்சியில் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளது.
வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்

15

## கீரிமலை – கொழும்பு பேருந்து சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 1
பருத்தித்துறை சாலையால் கீரிமலையிலிருந்து கொழும் புக்கு நடத்தப்பட்டு இடைநிறுத்தப்பட்ட பேருந்து சேவை மீண்டும் இன்று முதல் இடம்பெறவுள்ளது.
2020 ஆம் ஆண்டுவரை இடம்பெற்ற சேவையானது, பேருந்துகள் மற்றும் சாரதிகள் இன்மை

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதிய கல்விமுறைமை; உருவாக்க வேண்டும்!

## கல்வியமைச்சர் ஹரிணி தெரிவிப்பு



**கொழும்பு, ஒக்.1**

**கல்வியின் மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது மிகவும் முக்கியமானது. அந்தவகையில் இலங்கையை உலகில் அங்கீகரிக்கப்பட்ட நாடாக மாற்றும் கல்வி முறையை தயார் செய்ய வேண்டும் என்று பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். கொழும்பு ஆனந்தா கல்லூரியில் 396 தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் பங்குபற்றிய விசேட செயலமர்வொன்றில் கலந்துகொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வித்துறை அரசியலாகிவிட்டது. தற்போது சமூகத்தில் கல்வியின் மீது நம்பிக்கை இல்லை. நாட்டில் நிலவும் நெருக்கடிகளுக்கு விரைவான தீர்வுகளைத் தேடும் அதேவேளை சிறந்த கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்த விரும்புகிறோம். கல்வி என்பதன் மூலம் நாம் எதிர்பார்ப்பது அறிவை மட்டும் வழங்குவதன்று. அதையும் தாண்டிய ஒரு விரிந்த தொலைநோக்கு கல்வியில் உள்ளது. தொழிலுக்காக மட்டுமின்றி இந்த நாட்டைப் பொறுப்பேற்கக்கூடிய, இந்த நாட்டை மாற்றக்கூடிய, இந்த நாட்டை வழிநடத்தக்கூடிய நல்லொழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்கவேண்டும். நாட்டுக்குத் தேவையான மதிப்புமிக்க பிரஜைகள் கல்வி முறையின் மூலமே உருவாக்கப்படுகின்றனர். அரசாங்கம் என்ற வகையில் கல்வியில் அதிக கவனம் செலுத்துகிறோம். இது ஒரு எண்ணக்கரு மட்டுமல்ல, அதற்குத் தேவையான நிதிப் பங்களிப்பையும் எமது அரசாங்கம் வழங்கும் - என்றார். (ச)

# கூட்டணியில்லை தனித்தே போட்டி

## பெரமுன அறிவிப்பு

கொழும்பு, ஒக்.1

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்சவே பிரதமர் வேட்பாளராகக் களமிறங்குவார். எவருடனும் கூட்டணியில்லை. தனித்தே போட்டியிடுவோம் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் எம்மை விட்டுச் சென்றவர்கள் பொதுத் தேர்தலில் எந்தக் கட்சியில் போட்டியிடுவது என்ற இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியையும், ஐக்கிய மக்கள் சக்தியையும் ஒன்றிணைக்கும் முயற்சிகள் தீவிரமடைந்துள்ள நிலையில் பொதுஜன பெரமுனவின் ஒரு தரப்பினர் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

நாட்டுக்காகச் சென்றதாகக் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. தங்களின் குறுகிய நலன்களுக்காகவே இவர்கள் சென்றார்கள். இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச பிரதமர் வேட்பாளராகக் களமிறங்குவார். எவருடனும் கூட்டணியமைக்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# ரெலிபோன், யானை பேச்சு இடைநடுவே முறியும் நிலை

கொழும்பு, ஒக்.1

எதிர்வரும் பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளுக்கு இடையிலான கூட்டணி தொடர்பான பேச்சு முறிவடையும் நிலையை அடைந்துள்ளது என்றும், ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்த இரண்டு பிரதான நிபந்தனைகளே அதற்குக் காரணம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொதுத் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் அண்மையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இதுவரையில் சுமார் எட்டு கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ள போதும், ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டு பிரதான நிபந்தனைகள் காரணமாக, கலந்துரையாடல்களை முன்னெடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உட்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சக்தி, தொலைபேசி சின்னத்தில் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்றும், முன்னாள் ஜனாதிபதி, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புதிய கூட்டணியில் இருக்கக் கூடாது என்றும் ஐக்கிய மக்கள் சக்தி நிபந்தனை விதித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க பெற்ற பெரும்பான்மையான வாக்குகள் அவரது தனிப்பட்ட வாக்குகளாகக் கருதப்படுவதால் அவர் இல்லாத அரசியல் கூட்டணிக்கு உடன்பட முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள் கருதுகின்றனர்.

இந்தநிலைமையால் கூட்டணிப் பேச்சுகள் முறிவடையும் நிலையை எட்டியுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது. (எ-இ)

# பேக்கரிப் பொருள்கள் விலை குறைப்பில்லை

கொழும்பு, ஒக்.1

முட்டையின் விலை குறைக்கப்பட்டாலும் முட்டை தொடர்பான பேக்கரிப் பொருள்களின் விலையைக் குறைக்கமுடியாது என அகில இலங்கை பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது. கோதுமை மாவின் விலையில் மாற்றம் ஏற்பட்டால் மாத்திரமே பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகள் திருத்தப்படும் என அதன் தலைவர் என்.கே.ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். (ச)

## கிளிநொச்சியில்

# நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்படும்

கிளிநொச்சி, ஒக்.1

கிளிநொச்சியில் நிலவுகின்ற வெப்பமான காலநிலை காரணமாக பொதுமக்களின் நீர்ப் பாவனை வழமைக்கு மாறாக அதிகமாக காணப்படுகின்றது. கிளிநொச்சி நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் உற்பத்தி திறனை விட மக்களின் பாவனை அதிகரித்துள்ளமையால் நீர் விநியோகத்தை 24 மணிநேரமும் வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக, கிளிநொச்சி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை அலுவலகம் அறிவித்துள்ளது. எனவே இதன் காரணமாக தற்காலிகமாக குறிப்பிட்ட காலம் வரை மட்டுப்படுத்தப்பட்ட நேரத்துக்கு நீரை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, அலுவலகம் தெரிவித்துள்ளது. தொடர்ச்சியாக வெப்பமான காலநிலை நிலவிவருவதன் காரணமாக மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் பூநகரி, பொன்னகர், பாரதிபுரம், விவேகானந்த நகர் ஆகிய பகுதிகளுக்கு தினமும் காலை 5.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை நீரை விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகம் காணப்படுவதனால் பொதுமக்கள் நீரை சிக்கனமாகவும், சேமித்து வைத்தும் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகம் அறிவித்துள்ளது. (ஒ-214,113)

# நாட்டின் வளர்ச்சியே எங்களின் இலக்கு!

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.1

குறிப்பிட்டதொரு கொள்கையின் மூலம் வறுமையை ஒழித்து, பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதே ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கமாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

பொருளாதார வளர்ச்சியில் இருந்து நாட்டு மக்கள் பயன்பெறும் திட்டத்தை நாம் வகுப்போம். எமது பயணத்தில் நேர்மறையான இலக்குகள் உள்ளன. பெண்கள், முதியவர்கள், குழந்தைகள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் உட்பட சமூகத்தில் உள்ள அனைத்துத் தரப்பினரும் மகிழ்ச்சியான மற்றும் பொருளாதார ரீதியாக வலுவான வாழ்க்கையை ஏற்படுத்த வழிவகுப்போம். அரசியல் வெற்றியைப் பெறுவதற்கோ பொதுத் தேர்தலில் நாம் மக்கள் ஆணையைக் கோரவில்லை. நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்துக்கான கொள்கைகளை உருவாக்கவும், மக்களுக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்குமே நாம் மக்கள் ஆணையை கோரி நிற்கிறோம் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு, மலையகம் ஜனாதிபதி அநுரவின் பக்கம்!

## நிஹால் அபேசிங்க நம்பிக்கை

**கொழும்பு, ஒக்.1**

**வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்திலும் தேசிய மக்கள் சக்திக்கான ஆதரவு பெருகிவருகின்றது என்று அந்தக்கட்சியின் செயலாளர் நிஹால் அபேசிங்க தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகொள்வதற்குரிய தயார்படுத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றோம். 22 தேர்தல் மாவட்டங்களிலும் இதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு எமது அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் பணிகளை முன்னெடுக்கும் அதேவேளை தேர்தல் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பலமான பெரும்பான்மையுடன் அரசாங்கமொன்றை உருவாக்குவதவற்கு மக்கள் ஆணை கிட்டும் என நம்புகின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலின்போது வழங்கிய ஆதரவை விடவும் கூடுதல் ஆதரவு வழங்க மக்கள் தயாராகி வருகின்றனர். பிரதானமாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் மக்கள் மத்தியில் எமக்கான ஆதரவு அதிகரித்துவருகின்றது. தமிழ், முஸ்லிம் மக்கள் எம்முடன் இணைவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார். (எ-44)

# ஊழலுடன் தொடர்புடையோர் ரெலிபோன் அணியில் இல்லை

## ரஞ்சித் மத்தும தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.1

பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி ஐக்கிய மக்கள் கூட்டணியாகவே போட்டியிடுவோம். ஊழல் மோசடியுடன் தொடர்புடைய எவரும் இந்தக்கூட்டணியில் இணைத்துக்கொள்ள மாட்டார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மக்கள் 56 இலட்சம் வாக்குகளை வழங்கியுள்ளபோதும் அதற்கு எதிராக ஏனைய அனைத்துக் கட்சிகளுக்கும் 77 இலட்சம் வாக்குகளை மக்கள் வழங்கி இருக்கிறார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் எமது கூட்டணியில் இணைந்துகொள்ளாத பலர் பொதுத் தேர்தலில் இணைந்துகொள்ள இருக்கின்றனர். ஆனால் ஊழல் மோசடியுடன் தொடர்புபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் யாரையும் எமது கூட்டணியில் இணைத்துக்கொள்ளப்போவதில்லை. அதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

மக்கள் விடுதலை முன்னணியிடமிருந்து மக்கள் புதிய மாற்றத்தையே எதிர்பார்க்கின்றனர். ஜனாதிபதியின் நியமனங்கள் தொடர்பில் தற்போது விமர்சனங்கள் எழுந்துள்ளன. பல்வேறு குற்றச்சாட்டுகள் தெரிவிப்பவர்களுக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தின் எதிர்கால பயணத்தை இதன்மூலம் தெரிந்துகொள்ளலாம் - என்றார். (எ-இ)

# கோத்தாவை நினைவூட்டும் அநுரவின் செயற்பாடுகள்!

## *மஹிந்தானந்த கூறுகின்றார்*

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ஜனாதிபதி அநுரகுமாரவின் அண்மைக்கால தீர்மானங்கள், முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது தேர்தலுக்குப் பின்னர் எடுத்த தீர்மானங்களை ஒத்தவை என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவுடன், அவரும் ஜனாதிபதி அலுவலகத்துக்கு சொந்தமான 993 வாகனங்களை ஏனைய திணைக்களங்களுக்கு பகிர்ந்தளித்தார். மக்களின் அதிக எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் அரசாங்கம் உருவாக்கப்பட்டாலும், அவ்வாறான அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்வது கடினம் - என்றார். (எ-இ)

# பொதுத்தேர்தலின் பின்னரே மானியம் வழங்கல் நடைமுறை

விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் மானியம் வழங்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எடுத்துள்ள தீர்மானத்தை தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது.

பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மானியத்தை வழங்கும் தீர்மானம் மூலம் ஏனைய வேட்பாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ-இ)

# நாடாளுமன்றத் தேர்தலில் புதிய இடதுசாரிக் கூட்டணி

## *ரணில் ஆதரவாளர்கள் திட்டம்*

கொழும்பு, ஒக்.1

இடதுசாரி கூட்டணி ஒன்றைக் கட்டியெழுப்புவது தொடர்பில் சில எதிர்க்கட்சிகள் கலந்துரையாடி வருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியிலிருந்து நீங்கி, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கிய குழுவினர் இந்தக் கலந்துரையாடலில் முதன்மை வகித்துள்ளனர். நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான பிரசன்ன ரணதுங்க, நிமல் லான்சா, அனுர பிரயதர்ஷன யாப்பா, எஸ்.பி.திஸாநாயக்க உள்ளிட்ட குழுவினர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டுள்ளனர் என்று தெரியவருகின்றது.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைவது தொடர்பில் இங்கு ஒரு தரப்பினர் யோசனை முன்வைத்த போதும், அதில் கலந்துகொண்ட சிரேஷ்ட உறுப்பினர்கள் இந்த யோசனைக்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

சஜித் கூட்டணியுடன் இணைவதை விட சக்தி வாய்ந்த இடதுசாரி கூட்டணி ஒன்றை உருவாக்கி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதே அவசியம் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (எ-இ)




**சூ**டுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாதாம். அதுமாதிரி மஹிந்த குடும்பமும் இப்போதைக்கு எலக்சன் பக்கம் போய் இருக்கிற கொஞ்ச நஞ்ச மானமரியாதையையும் இழக்கக் கூடாது எண்டு முடிவெடுத்திருக்கினமாம். அதால இந்தமுறை பார்லிமெண்ட் எலக்சனில நாமலும் இறங்கமாட்டாராம். கட்சிக்காக எல்லா இடமும் போய் பிரசாரம் செய்வார், ஆனால் எந்த ஒரு தொகுதியிலையும் அவர் எலக்சன் கேக்கமாட்டார் எண்டு தீர்மானிச்சாச்சாம்.

இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில அவையின்ர சொந்தத் தொகுதியிலேயே மரண அடி விழுந்ததாலதான் இந்த முடிவாம். ஜனாதிபதித் தேர்தல் மாதிரி பார்லிமெண்ட் எலக்சனிலையும் சொந்தத் தொகுதியில மண்ணைக் கவ்வினால் பிறகு அப்பிடியே மஹிந்த குடும்பம் அரசியல் எண்டதையே மறக்கவேண்டியதுதான். அதில இருந்து தற்காலிகமாத் தப்பிறதுக்குத்தான் இந்த முடிவாம்.

எண்டாலும் தங்களுக்கு சில இடங்களில இன்னும் செல்வாக்கு இருக்கு எண்டு மொட்டுக் கட்சிக்காரர் நம்புகினமாம். கிட்டத்தட்ட எட்டு எம்.பி.க்களை எடுக்கலாம் எண்டு அவையின்ர அடிமட்டத் தலைவர்மார் சொல்லியிருக்கினமாம். அதில ஒண்டிரண்டு தேசியப்பட்டியல் எம்.பி. பதவியாம். அப்பிடி தேசியப்பட்டியல் சீற் கிடைச்சால் இந்தமுறை ஐக்கிய தேசியக்கட்சியில இருந்து ரணில் வந்தமாதிரி, நாமல் பார்லிமெண்டுக்குள்ள வாற பிளான் இருக்காம். பழைய ஆக்களை எலக்சனில இறக்கினால் சனங்கள் பழைய கோபத்தில வாக்குப் போடமால் விட்டிடுங்கள் எண்டதுக்காக இந்தமுறை எல்லா இடமும் புது ஆக்களை, அதுவும் இளம் பெடியளைத்தான் நாமல் இறக்கப்போறாராம். அப்பிடியாவது வாக்குகளை எடுக்கலாமோ எண்டு தூண்டில் போட்டுப் பாக்கினம் போல.

நாமல் இந்தமுறை எலக்சனில நிக்காததுக்கு இன்னொரு காரணமும் இருக்காம் ரணிலோட போனவை எல்லாம் திரும்பி வந்து எலக்சனில சீற் கேக்கினமாம். அவைக்கும் 'இந்தமுறை பழைய ஆக்கள் ஒருத்தரும் இறங்கேலை. நான் கூட இறங்கேலை. அப்ப எப்பிடி உங்களுக்கு சீற் தர ஏலும்?' எண்டு நாமல் கேக்கிறாராம். நாமலே இறங்காட்டி நாங்கள் எப்பிடி சீற் கேக்கிறது எண்டு அவையும் வாயை மூடிக்கொண்டு போகினமாம்.எப்பிடி இருந்தவை இப்ப இப்பிடி ஆகிட்டினமே?

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கழிவகற்றல் செயற்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.1

நாடு முழுவதும் சர்வதேச மாவட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் 'நாட்டைத் தூய்மையாக்குவோம்' எனும் தொனிப் பொருளில் 306 பி-1 ஆளுநர் லயன் ரஜித றொட்ரிக் கோவின் தலைமையில் சூன் 26 லயன் கு.பிறேம்காந் நெறிப்படுத்தலில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவு அகற்றும் நிகழ்வு யாழ். நகரம் மற்றும் பண்ணைப் பகுதியில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ். புதிய உலக லயன்ஸ் கழகம், கைட்ஸ் தீவக லயன்ஸ் கழகம் மற்றும் ஏனைய கழக உறுப்பினர்கள், பொலிஸார், மாநகரசபை உறுபினர்கள், பொது மக்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ரி-159)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். குடும்பப் பெரியவர்களுடன் கலந்து பேசி முக்கியமான முடிவு எடுப்பீர்கள். மாலையில் பள்ளி, கல்லூரிக் கால நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**இடபம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குல தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். ஆனாலும், உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.

**சிம்மம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்களால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக் கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். உறவினர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**துலாம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டு. குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும் போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும்.

**தனுசு:** மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் அவசியத் தேவைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**கும்பம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாள். பிள்ளைகளால் வீட்டில் உற்சாகமும் கலகலப்புமான சூழ்நிலை காணப்படும். சிலருக்கு தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள்.

**மீனம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண் விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. திடீர் செலவுகளால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும்.



## பரிசளிப்பு நிகழ்வு

கொடிகாமம் ஒக்.1

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வு வித்தியாலய அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் ஆ.சின்னத்தம்பி ஆசிரியர் நினைவரங்கத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு அமரர்களான செல்லையா, சிதம்பரம் ஆகியோரின் ஞாபகார்த்த பணப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாக வேலணை சரவணை நாகேஸ்வரி வித்தியாலய உப அதிபர் ச.சிவகுமாரன், திருமதி சிவகுமாரன் ஆகியோரும், சிறப்பு விருந்தினராக பழைய மாணவர் கு.சுரேஸ்குமாரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (எ-25,159)

## சிறுவர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.1

ஏழாலை புனித இசிதோர் முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணியளவில் முன்பள்ளி முன்றலில் ஏழாலை புனித இசிதோர் ஆலயப் பங்குத் தந்தை வணபிதா ஜே.அ. ஜோ[illegible] தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-66)

## கூட்டுறவு தின விழா

யாழ்ப்பாணம், ஒக்.1

பண்டத்தரிப்பு பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் 102 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா தலைமைக் காரியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் தே. கிறிஸ்துராஜா தலைமையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப. 10:30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கூட்டுறவு ஆணையாளரும் சங்கங்களின் பதிவாளருமான (வடக்கு மாகாணம்) ந.லிங்கநாதனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரம், இளவாலை பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.எ. சி. ஜெயராஜ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-45-63)

## வாசிப்பு தின போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக்.1

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர்ப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட கொக்குவில் பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் 'உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே' எனும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் போட்டிகள் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

கொக்குவில் பொதுநூலகம், கோண்டாவில் பொதுநூலகம், நல்லூர் பொதுநூலகம் ஆகிய நூலகங்கள் சார்ந்து 120 வரையான பாடசாலை மாணவர்கள் போட்டிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றினர். (எ-25-66)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஒக்.1

2024 ஆம் ஆண்டுக்கான உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு பிறப்புச் சான்றிதழைப் பதிவு செய்யாத சிறுவர்களுக்கான நடமாடும் சேவை யாழ். மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளது. சிறுவர்களுக்கான பிறப்புச் சான்றிதழைப் பதிவு செய்வதற்காக உரிய ஆவணங்களுடன் வருகை தந்து பிறப்புச் சான்றிதழைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (எ-45-66)

## திருத்தல தரிசன யாத்திரை

யாழ்ப்பாணம், ஒக.1

கார்த்திகை விரதத்தை முன்னிட்டு இலங்கை முதலுதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில், யாழ்.நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து வரலாற்றுச் சிறப்பு மிக்க கதிர்காமக் கந்தன் ஆலயம் வரையான வேல்தாங்கிய புனித திருத்தலத் தரிசன யாத்திரை எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை நல்லூர்க் கந்தன் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது. யாத்திரையில் கலந்து கொள்ள விரும்பும் அடியவர்கள் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும், மேலதிக தகவல்களுக்கு 0779236552 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் இலங்கை முதலுதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையினர் தெரிவித்துள்ளனர். (எ-25,66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இன்னும் பத்தாயிரம் நாள்கள்!

2050ஆம் ஆண்டுக்குள் கடல்நீர் மட்டம் அதிகரிப்பதால், பேராபத்தைச் சந்திக்கவுள்ள நாடுகளில் ஒன்றாக இலங்கையும் பட்டியலிடப்பட்டிருக்கின்றது. ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் அமர்வு தற்போது நடைபெற்றுவரும் நிலையில், அதன் துணைஅம்சமாக இடம்பெற்ற 'கடல்மட்ட உயர்வால் தீவுகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்' என்ற தொனிப்பொருளிலான மாநாட்டிலேயே, பருவநிலை மாற்றத்தால் உலகம் தற்போது எதிர்கொண்டுள்ள ஆபத்தம்சங்களை பட்டியலிட்டிருக்கின்றார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலரான குட்டரஸ்.

உலகளவில் அதிகரித்துவரும் மனிதப்படுகொலைகள், வாழ்விட மோதல்கள், சனத்தொகைப் பெருக்கம், ஆபிரிக்காவின் உணவுத் தட்டுப்பாடு, பெருந்தொற்றுகளின் தாக்கம் என்பவற்றுக்கு நிகராக 'பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் ஆபத்துகள்' தொடர்பிலும் இம்முறை கலந்துரையாடப்பட்டிருப்பது வரவேற்கப்படவேண்டியதே. ஆனால், குட்டரஸின் கோரிக்கைகளும் வலியுறுத்தல்களும் எவ்வளவுதூரம் கண்டுகொள்ளப்படப் போகின்றது என்பதற்கான பதில்களையும் இங்கே தேடவேண்டியிருக்கின்றது.

2022ஆம் ஆண்டு எகிப்தின் தலைநகர் கெய்ரோவிலும், அதற்கு முன்னதாக கிளாஸ்கோவிலும் பருவநிலை மாநாடுகள் நடத்தப்பட்டிருக்கின்றன. கிளாஸ்கோவில் மாநாடு நடைபெற்றபோது, பருவநிலை மாற்றத்தால் உலகில் முதலாவதாக அழிவடையும் தீவாக (மக்கள் வசிக்கும் தீவு) அறியப்படும் துவாலுவின் அமைச்சரொருவர் கடலுக்குள் இறங்கி நின்றபடி உரையாற்றியமை பலருக்கும் நினைவிருக்கலாம். கெய்ரோமாநாட்டின்போதும் ஏகப்பட்ட வலியுறுத்தல்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால், இவற்றின் பின்னரும் கார்பன் உமிழ்வை வல்லரசுகள் அதிகரித்திருக்கின்றனவே அன்றி குறைத்ததாக இல்லை.

உலகளாவிய போர்ப்பதற்றம், காலநிலை தொடர்பில் வல்லரசுகள் கொண்டிருக்கும் அசமந்தப் போக்கு, ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகள், பிளாஸ்ரிக் உமிழ்வு, பொருளாதாரச் சமநிலையற்ற வளப்பகிர்வு மற்றும் கக்கப்படும் கார்பன் என்பன தீவு நாடுகளின் ஆயுளையும், வறிய நாடுகளின் பொருளாதாரக் கட்டமைப்பையும் 'முற்றாகத் தீர்மானித்துக் கொண்டிருக்கும்' இக்காலத்தில், இந்த அத்துமீறல்களிலும், 'பருவநிலைக் குழப்ப அடாவடிகளிலும்' ஈடுபடும் நாடுகளை பெயர் சொல்லி அதட்டுவதையேனும் விட்டுவிட்டு, தீவு நாடுகளின் ஆயுளை எண்ணிக் கொள்ளும் போக்கால் ஐக்கிய நாடுகள் சபை எதைத்தான் சாதிக்கப்போகின்றது?

பருவநிலை மாறுகின்றது, ஆபிரிக்காவை அதிக வெம்மை ஆட்கொள்கின்றது, ஐரோப்பாவில் இலையுதிர்வு ஆரம்பிக்கின்றது, காலநிலை மாறுபாடான வலசையால் பல்லாயிரம் பறவைகள் (பிளமிங்கோ) இறக்கின்றன என்பதெல்லாம் குறைந்தபட்சப் புரிதலுடன் எம் கண்களில் மிகச் சாதாரணமாகப் புலப்படும் விடயங்களே. ஆனால், இந்த ஆபத்தை இயல்பு மறுப்பை தாங்கிப் பிடிப்பதற்கு என்னென்ன செயற்றிட்டங்களை ஐக்கிய நாடுகள் சபை செய்திருக்கின்றது?

வெறும் அறிக்கைகளையும் எச்சரிக்கைகளையும் அள்ளி வழங்கிக் கொண்டிருக்காமல், இந்த விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை போர்க்கால அடிப்படையில் செயற்படவேண்டும். இல்லையேல் தமிழர்களுக்கு வாய்த்த '13' போல்தான் இந்த விவகாரமும் மாறும்.



## கலைக்கப்படவுள்ள அரச நிறுவனங்கள்

**கொழும்பு, ஒக்.1**

**இலங்கை திரிபோஷா நிறுவனம் உட்பட பல அரச நிறுவனங்களை கலைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என்று தெரியவருகின்றது.**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கீழ் நிர்வகிக்கப்படும் நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை உருவாக்கம், திட்டமிடல் மற்றும் சுற்றுலா அமைச்சு தொடர்பான நோக்கங்களுக்கு அமைய, விசேட வர்த்தமானியில் குறிப்பிட்டபடி, இலங்கை திரிபோஷ நிறுவனம், இலங்கை பத்திரிகை பயிற்சி நிறுவனம், சிறுவர் பாதுகாப்பு தேசிய அறக்கட்டளை நிதியம் மற்றும் திறைசேரி செயலாளருக்குச் சொந்தமான நிறுவனங்கள், குறைவான செயற்றிறன் கொண்ட நிறுவனங்கள் அல்லது பயன்படுத்தப்படாத சொத்துகள் சட்டத்தின் மறுமலர்ச்சி (அகற்றுதல்) சட்டத்தின் கீழ் கலைக்கப்பட உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. கலைக்கப்படவுள்ள அல்லது ஏனைய நிறுவனங்களுடன் இணைக்கப்படவுள்ள நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

## நாமலுக்கு எதிராக விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஒக்.1

பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் நாமல் ராஜபக்ச கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அரச வாகனம் ஒன்றைத் தேர்தல் பரப்புரைக்குப் பயன்படுத்தியமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக்கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த விசாரணைகளைக் கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (எ-இ)

## சிறீலங்கா எயார்லைன்ஸை தனியார்மயமாக்குவதில்லை

*அநுர அரசாங்கம் முடிவு*

சிறீலங்கா எயார்லைன்ஸை தனியார்மயப்படுத்தும் திட்டம் கைவிடப்படவுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. நட்டத்தில் இயங்கும் சிறீலங்கா எயார்லைன்ஸ் நிறுவனத்தை தனியார் மயப்படுத்தும் திட்டம் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தைக் கைவிடுவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## எம்.பி.க்களின் துப்பாக்கிகளை மீளக்கையளிக்கக் கோரிக்கை

கொழும்பு, ஒக்.1

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களின் தனிப்பட்ட பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட கைத்துப்பாக்கிகளை பாதுகாப்பு அமைச்சிடம் தாமதமின்றித் திரும்ப ஒப்படைக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. துப்பாக்கிகளைப் பெற்ற நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கு அவற்றை மீள ஒப்படைக்குமாறு நாடாளுமன்ற அதிகாரிகள் தனித்தனியாகக் கடிதம் அனுப்பியுள்ளனர் என்று மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். (எ-சி)

## அரசாங்க வாகனங்கள் பகிரங்க ஏல விற்பனை

கொழும்பு, ஒக்.1

முன்னைய அரசாங்கத்தில் அரச நிறுவனங்கள் பயன்படுத்திய வாகனங்கள் பல ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

கடந்த அரசாங்கத்தில் பயன்படுத்தப்பட்ட பல சொகுசு வாகனங்கள் காலி முகத்திடலில் தற்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. அதிகப்படியான எரிபொருள் பாவனையுள்ள அதிசொகுசு வாகனம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு, அதில் கிடைக்கும் பணத்தின் மூலம் அரச மருத்துவமனைகளுக்கு அம்புலன்ஸ் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-22)

**நாளை**

02.10.2024

புதன்கிழமை - புரட்டாதி - 16

சுபநேரம் : 04.32- 06.02
ராகுகாலம் : 12.02 - 01.32

**நாளொரு நல்வார்த்தை**

**நம் தன்னம்பிக்கை, திட்டம் மற்றும் நடவடிக்கை தீவிரமாயிருக்கும்போது நாம் எவ்வளவு சிறியவர் என்பது ஒரு விஷயமே அல்ல.**

- பிடல் காஸ்ட்ரோ-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நஸ்ரல்லா படுகொலை ஈரானில் துக்கதினம்

பெய்ரூட், ஒக்.1

லெபானின் பெய்ரூட்டில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா உயிரிழந்துள்ள நிலையில், ஈரானில் ஐந்து நாள்கள் துக்க தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேலால் படுகொலை செய்யப்படலாம் என்ற அச்சம் காரணமாக பல ஆண்டுகளாக பொது வெளிக்கு வருவதைத் தவிர்த்திருந்த நஸ்ரல்லா, மத்திய கிழக்கில் மிகவும் பிரபலமான மற்றும் செல்வாக்கு மிக்க நபராவார்.

நஸ்ரல்லாவின் உயிரிழப்பு வரலாற்றுத் திருப்புமுனை என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா தலைவர் கொல்லப்பட்டமை, மத்திய கிழக்கில் போர் பற்றிய அச்சத்தை தீவிரப்படுத்தியுள்ளது. (ஏ-இ)

# தமிழரசுவின் அழைப்பை பரிசீலனை செய்கிறோம்!

### தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.1

**இலங்கைத் தமிழரசு கட்சியின் ஒற்றுமைக்கான அழைப்பை தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை பரிசீலனை செய்வதாக தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் பொதுச்செயலாளர் ச.கீதன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்திக்குறிப்பில்,

2024 ஆம் ஆண்டுக்கான பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய ஜனாதிபதி தெரிவாகிய தன் பிற்பாடு புதிய அரசியல் கலாசாரத்துக்கு தென்னிலங்கை செல்வதனை காணக்கூடியதாக இருக்கிறது.

தமிழர்கள் அதற்கு ஏற்ற வகையில் அதற்கு ஈடு கொடுக்கக்கூடிய வகையில் தமது அரசியல் தந்திரோபாயங்கள் மூலமாக தமிழர்களின் நீண்டகால அபிலாசைகளை நிறைவு செய்து கொள்ளக்கூடிய வழிமுறைகளை ஒற்றுமையுடன் கையாள வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதை நாம் உணர்கின்றோம்.

தமிழர்கள் ஒரே அணியில் சாத்தியமான வழிமுறைகளுக்கூடாக நகர வேண்டிய தேவை உள்ள அதே நிலையில் மாறிவரும் சூழலுக்கு ஏற்ற வகையில் இளைஞர்களின் வகிபாகத்தை அரசியலில் உறுதிப்படுத்தி தொடர்ந்து வரும் ஜனநாயக வெளிகளை கையாள்வதற்கு இளைஞர்களை பலப்படுத்த வேண்டிய தேவையும் உண்டு. இலங்கைத் தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் வெவ்வேறு காரணங்களுக்காக பிரிந்து சென்றிருக்கக் கூடிய அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைக்கும் வகையில் ஒற்றுமைக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதனை நாம் வரவேற்கிறோம். ஊழலுக்கு எதிரான தமிழ்த் தேசிய சிந்தனையுடன் இளைஞர்களுக்கான சரியான வகிபாகங்களை வழங்கி புதிய அரசியல் வியூகங்களை வகுத்து செயற்பட தமிழரசு கட்சி தயாராக இருக்குமாக இருந்தால் அதன் ஒற்றுமைக்கான அழைப்பை தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை சாதகமாக பரிசீலிக்கும்- என்றுள்ளது. (ச-27)

## ஹாட்லிக் கல்லூரியில் 32 மாணவர்கள் 9 'ஏ'

யாழ்ப்பாணம், ஒக்.1

க.பொ.த.சாதாரண தரம் 2023 (2024) பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் 32 பேர் 9 'ஏ' சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

தமிழ்மொழியில் தோற்றிய 17 மாணவர்களும் ஆங்கிலமொழியில் தோற்றிய 15 மாணவர்களுமாக 32 மாணவர்கள் 9 பாடங்க ளிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர்.

அத்துடன் தமிழ்மொழியில் தோற்றிய 20 மாணவர்களும் ஆங்கிலமொழியில் தோற்றிய 08 மாணவர்களுமாக 28 மாணவர்கள் 8 பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர்.

இதே வேளை, க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் 154 பேர் தோற்றிய நிலையில் அத்தனை பேரும் சித்தியடைந்துள்ளதன் மூலம் நூறு வீத தேர்ச்சி அடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச-100)

## மறைவிடத்தில் கொமேனி

தெஹ்ரான், ஒக்.1

இஸ்ரேலின் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் கொல்லப்பட்டுள்ளதைத் தொடர்ந்து ஈரானின் ஆன்மீக தலைவர் அயத்தொல்லா அல் கொமேனி பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார் என ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. ஹமேனி பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளார் ஹிஸ்புல்லா அமைப்பின் அடுத்த தலைவர் தொடர்பாக ஈரான் அந்த அமைப்புடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது என விடயமறிந்த வட்டாரங்கள் ரொய்ட்டருக்குத் தெரிவித்துள்ளன. இதே வேளை ஹிஸ்புல்லா தலைவரின் மரணத்துக்குப் பழி வாங்கப்படும் என ஈரானின் ஆன்மீகத் தலைவர் தெரிவித்துள்ளார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (ஏ-இ)



## நாட்டின் பிரச்சினைகளுக்கு முற்போக்கு தீர்வு அவசியம்

### சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.1

நாட்டின் பிரச்சினைகளுக்கு முற்போக்கான தீர்வுகளை வழங்குவதே தங்களது நோக்கமே தவிர, சீர்குலைப்பது தங்களது நோக்கமல்ல என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொலன்னாவ தொகுதி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாக அனைத்துத் தரப்பிலிருந்தும் பல சவால்களை நாங்கள் எதிர்கொண்டுள்ளோம். இதனால் பெரும்பாலும் மக்களே சிரமங்களை எதிர்நோக்கும் நிலையில் உள்ளனர்.

தற்போதைய அரசியல் செயற்பாட்டில் நாட்டை வெல்ல வைப்பதே ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கமாகும். மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்காக நாம் தொடர்ந்தும் பாடுபடுவோம்.

சீர்குலைக்கவோ அல்லது பிரச்சினைகளை உருவாக்கி அரசியல் வெற்றிகளைப் பெறவோ நாம் முனையவில்லை,

மாறாக முற்போக்கான முறையில் செயற்பட்டு நாட்டுக்கும் மக்களுக்கும் சாதகமான தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுப்போம்- என்றார். (ச-இ)



## விற்பனைச் சந்தை

யாழ்ப்பாணம், ஒக். 1

கோப்பாய்ப் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் விற்பனைச் சந்தை நிகழ்வு பிரதேச செயலக வளாகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. (ம-22-66)



அளவெட்டி தெற்கு வாணி முன்பள்ளி விளையாட்டு போட்டிகள் ஆசிரியர் திருமதி யோ.வஜிதாவின் தலைமையில் கடந்த 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது. (ம-22-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்கள் விடயத்தில் பழைய நிலையே தொடர்கிறது

## ஓ.பன்னீர்செல்வம் வேதனை

**சென்னை, ஒக். 1**

**இலங்கையில் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோதிலும், தமிழக மீனவர்களைக் கைதுசெய்யும் விடயத்தில் முன்னைய நிலையே தொடர்வதாக தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.**

தமிழக மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும்போது, அவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்வதற்கு தனது அதிருப்தியை வெளியிட்டு கருத்துத் தெரிவிக்கும்போதே, ஆட்சி மாற்றத்தின் பின்னரும் மீனவர்கள் விடயத்தில் எந்த முன்னேற்றமும் எட்டப்படவில்லை என்று ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

அத்துமீறிய மீன்பிடி என்ற குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதும், கைது செய்யப்படும் தமிழக மீனவர்கள் இலங்கை அரசால் துன்புறுத்தப்படுவதும், தமிழக மீனவர்களை விடுவிக்க இலங்கை நீதிமன்றத்தால் மிகப்பெரிய தொகை அபராதமாக விதிக்கப்படுவதும் தொடர் கதையாக நிகழ்ந்து வருகிறது. இவை தமிழக மீனவர்கள் மத்தியில் அமைதியின்மையையும் ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளது என்றும் ஓ.பன்னீர்செல்வம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுபோன்ற தொடர் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் மூலம் தமிழக மீனவர்களின் மத்தியில் ஓர் அச்சத்தை ஏற்படுத்த இலங்கை அரசு முயற்சிக்கிறது. இது தமிழக மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை. இந்திய எல்லைக்குட்பட்ட பாரம்பரியமான இடங்களில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வது என்பது தமிழக மீனவர்களின் உரிமை. இந்த உரிமையை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பும் கடமையும் மத்திய, மாநில அரசுகளுக்கு உண்டு என்றும் ஓ.பன்னீர்செல்வம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)





## கடற்கரை கரப்பந்தாட்டத்தில் கிளிநொச்சி மாணவன் சாதனை

கிளிநொச்சி, ஒக்.1

தேசியரீதியில் பல்கலைக்கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற இருவர் பங்குபற்றும் கடற்கரை கரப்பந்தாட்டத்தில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கிளிநொச்சி மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக் கழக வீரரும், பல்கலைக்கழக மாணவனுமாகிய நா.நிசாந்தன் பங்குபற்றிய அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

குழுநிலைப் போட்டியில் மூன்று அணிகளை வீழ்த்தி காலிறுதிப் போட்டியில் வயம்ப பல்கலைக்கழகத்தையும், அரையிறுதிப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழகத்தையும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தெரிவானார்.

அரை இறுதிப்போட்டியில் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்திடம் 1:1 சமநிலையாக இறுதி சுற்றில் 14:13 என்ற அடிப்படையில் தோல்வி அடைந்து இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். (எ-25,113)



## வவு. இறம்பைக்குளம் ம.வி. 25 மாணவர்கள் 9 'ஏ' சித்தி

தற்போது வெளிவந்துள்ள சாதாரணதரப்பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் 25 மாணவர்கள் '9 'பாடங்களிலும் 'ஏ' சித்தியைப் பெற்றுள்ளனர். 16 மாணவர்கள் எட்டுப்பாடங்களில் 'ஏ' சித்தியையும்,12 மாணவர்கள் 7 பாடங்களில் 'ஏ' சித்தியையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். (ச-110)

சாதாரண தரப் பரீட்சையில்

## வாழ்வக மாணவன் ஐந்து பாடங்களில் 'ஏ'

யாழ்ப்பாணம், ஒக்.1

சுன்னாகம் வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்தைச் சேர்ந்த மாணவன் சதீஸ்குமார் சங்கீதன் வெளியான 2023 கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் 5 பாடங்களில் ஏ சித்தியெய்தியுள்ளார்.

தமிழ்மொழி, சைவசமயம், தொடர்பாடலும் ஊடகக் கற்கையும், கர்நாடக சங்கீதம், குடியியல் கல்வி ஆகிய ஐந்து பாடங்களில் ஏ சித்தியும், வரலாறுப் பாடத்தில் பி சித்தியும், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் சி சித்தியும் விஞ்ஞானத்தில் எஸ் சித்தியும் பெற்றுள்ளார்.

யாழ்.தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவனே சிறப்பான சித்தி பெற்றுக் கல்லூரிச் சமூகத்துக்கும், வாழ்வக சமூகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார். (ச-66)



## பரிசில் நாள்!

கொடிகாமம் , ஒக்.1

சாவகச்சேரி றிபேக் கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வு கல்லூரி முதல்வர் செ.பேரின்பநாதன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி பூமாரி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவரும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியுமான த.பிரதீபன் கலந்துகொண்டார். (ச-22,159)

## கொக்குவில் இந்து 7 மாணவர்கள் 9 'ஏ'

யாழ்ப்பாணம், ஒக்.1

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் ஏழு மாணவர்கள் 9 ஏ சித்தியையும், 22 மாணவர்கள் 8 ஏ சித்தியையும், 21மாணவர்கள் 7 ஏ சித்தியையும் பெற்றுள்ளனர். (ச-66)

## யாழ். மத்திய கல்லூரி இரு மாணவர்கள் 9'ஏ'

யாழ்ப்பாணம், ஒக்.1

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் இரண்டு மாணவர்கள் 9 ஏ சித்தியையும், 2 மாணவர்கள் 8 ஏ சித்தியையும், ஐந்து மாணவர்கள் 7 ஏ சித்தியையும் பெற்றுள்ளனர். (ச-66)

## சிறுவர், முதியோர் தின நிகழ்வு அச்சுவேலியில்

யாழ்ப்பாணம், ஒக்.1

யாழ். அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம் முன்னெடுக்கும் சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் நாள் நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் ம.கருணாமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பாடசாலையின் முன்னாள் அதிபர் ஏ.விக்னேஸ்வரராஜா, ஓய்வுநிலை ஆசிரியை சரஸ்வதி முத்துக்குமாரசுவாமி ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ச-66)



யாழ். மாவட்ட ஆதரவாளர்களுடனான சந்திப்பில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியான புளொட் உறுப்பினர்கள் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தனர். இந்தச் சந்திப்பு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் த.சித்தார்த்தனின் இல்லத்தில் நடைபெற்றது. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனான், சிரியாவுக்கு செல்வதைத் தவிர்க்குக




வெளிவிவகார அமைச்சு அறிவுறுத்து

மறு அறிவித்தல் வரை லெபனான் மற்றும் சிரியாவுக்குச் செல்ல வேண்டாம் என்று வெளிவிவகார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

லெபனான் மற்றும் சிரியாவில் தற்போது நிலவும் பதற்றமான சூழ்நிலை காரணமாகவே குறித்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ம-66)

## சிறுவர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஒக். 1

சித்தாந்த வித்தகர் மு.ஞானப்பிரகாசம், இலக்கிய கலாநிதி மு.கந்தையா ஞாபகார்த்த சித்திவிநாயகர் நூல் நிலையம் நடாத்தும் சிறுவர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் ஏழாலை மேற்கு சரோஜினி பூங்கா வளாகத்தில் நூலகத் தலைவர் மு.வைத்திலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி சு.பரமானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ம-66)

## நல்லூரில் இன்று சிறுவர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 1

நல்லூர்ப் பிரதேச செயலகம் நடத்தும் 'உலக சிறுவர் தின' நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-66)


## காணி விற்பனைக்கு

நீர்வேலி, இறைமாசுவன் சந்தியில் அமைந்துள்ள பரப்பு-2 குளி-5.874 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

**076 755 2253, 077 647 2003**

## மானிப்பாய் பரிஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாரவூர்தி பகிரங்க ஏல விற்பனை

எமது சங்கத்திற்கு சொந்தமான 24ஸ்ரீ 9355 இலக்க IZUZU ரக பாரவூர்தி பகிரங்க ஏலத்தில் 19.10.2024 ம் திகதி சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு பொன்னாலை வீதியில் உள்ள மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற உள்ளது. அவ் லொறியினை பார்வையிட விரும்புவோர் அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 4.00 வரை பார்வையிட முடியும். இவ் ஏல விற்பனையில் கலந்து கொள்ள விரும்புவோர் ஏல விற்பனைத்திகதி அன்று காலை 9.30 மணிக்கு முன்னர் மீளளிக்க முடியாத முற்பணமாக ரூபா 1000.00 ம் மீளளிக்கக் கூடிய முற்பணமாக ரூபா 10000.00 ம் தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்று இவ் ஏல விற்பனையில் கலந்து கொள்ள முடியும் என்பதனை தாங்களுக்கு அறியத்தருகின்றேன்.

**தலைவர்**
**மானிப்பாய் பரிஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**தொலைபேசி இலக்கம் :- 0212255011**

(CR/43313) J-1


## 34வது பிறந்த நாள் நினைவும் 10ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்




அமரர்

### தயாபரன் சிவதர்ஷன்

(உரிமையாளர் -சிவதயா அச்சகம்)

திதி : சதுர்த்தசி 01.10.2024

எம் அன்பு மகனே சிவதர்ஷா! கனவுகளை கானல் நீராக்கி
காலத்துயர் சுமந்தோம் கண்ணீரில் கரைகின்றோம்
ஞாலம் உள்ளவரை நாமும் உள்ளவரை
வாழும் நாளெல்லாம் நீயே எம் நினைவுகள்
பாழும் விதி பிரித்தால் பந்தம் அகன்றிடுமா?
நாளும் எம் நினைவில் நீயே உயிர்த்திருப்பாய்!

எம்மைப் பெற்றெடுத்தோருக்கு நினைவலைகள்



திருநாவுக்கரசு நாகரட்ணம் | நாகரட்ணம் தனலக்சுமி | கதிரவேலு விஜயசிங்கம் | விஜயசிங்கம் நாகேஸ்வரி

தயா வெளியீடு
இல: 92 (150), நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
தயா அச்சகம்
077 396 5214

# மரண அறிவித்தல்

## அமரர் சின்னத்தம்பி சிவபாக்கியம்

**(ஓய்வுபெற்ற ஆசிரியர் பகுதித்தலைவர்)**



பிறப்பு 25.09.1938 — இறப்பு 29.09.2024

கைதடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவபாக்கியம் நேற்று முன்தினம் (29.09.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம்-தில்லைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பர்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் சுபாஸ்கரன் (சுவிஸ்), தெய்வலோஜினி (ஜேர்மனி), இரவிகரன் (ஓய்வு பெற்ற சுகாதார உத்தியோகத்தர்), சிவலோஜினி (உப அதிபர் யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்), தவலோஜினி (ஆசிரியை மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை) ஐங்கரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அன்பழகி, வசந்தலா, யோகேஸ்வரன், அமரர் கிருஷ்ணமூர்த்தி, பக்தராசா, எழிற் ஆகியோரின் அன்பு மாமியாரும் அர்ச்சுதா, ரனுஜன், ஆரூஷன் ரஜீவன், ரதீபா, அபிநயா, பகிர்தா, பபிலன், பவதாரகன், அபியானா, தமீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அகானாவின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான முத்தம்மா, வீரசிங்கம் மற்றும் நாகேஸ்வரி, புஸ்பமலர் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற செல்லையா, மற்றும் தட்சணகைலாயபதி, சிவசிதம்பரம், சிவபாலன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.10.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கைதடி ஊத்தல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**மகள்-077 310 5463**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கமலா ஹாரிஸை விமர்சிக்கும் ட்ரம்ப்



ஜோ பைடனைப் போலவே கமலா ஹாரிஸும் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஆளும் கட்சி சார்பில் தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸும், குடியரசுக் கட்சி சார்பாக டொனால்ட் ட்ரம்பும் போட்டியிடுகின்றனர். கருத்துக் கணிப்புகளின் அடிப்படையில் கமலா ஹாரிஸ் முன்னிலை வகிக்கின்றார் என்று கூறப்படுகின்றது. இந்தநிலையில் கமலா ஹாரிஸை மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று விமர்சித்துள்ளார் ட்ரம்ப். புலம்பெயர்ந்தோரால் வன்முறை மற்றும் பிற குற்றங்கள் அதிகரித்துவிட்டன. அதனால் அமெரிக்கா சிதைந்து வருகிறது. பல்வேறு விடயங்களில் ஜோ பைடனின் ஆட்சி தோல்வி கண்டுவிட்டது. சட்டவிரோதக் குடியேற்றங்களைத் தடுக்காவிட்டால் கமலா ஹாரிஸால் ஒன்றும் செய்யமுடியாது என்றும் அவர் விமர்சித்துள்ளார். (ஏ-இ)

# துப்பாக்கிச்சூட்டில் 18 பேர் உயிரிழப்பு

கேப்டவுன், ஒக்.1




தென்னாபிரிக்காவின் கேப் மாகாணத்தில் உள்ள லுசிகி நகரில் கடந்த சனிக்கிழமை இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

அருகருகில் இருந்த இரண்டு வீடுகளில் அடுத்தடுத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களில் 12 பெண்களும் உள்ளடங்குவர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் தப்பியோடியுள்ள நிலையில் உள்ளூர் பொலிஸார் விசாரணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். முதற்கட்ட விசாரணையில், குடும்ப நிகழ்ச்சியொன்றில் அனைவரும் கலந்துகொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் நடந்துள்ளமை தெரியவந்துள்ளது. (ஏ-இ)

# கனடா பொருளாதாரம் 2025 வளர்ச்சியடையும்!

## டெலொயிட் தகவல்



றொறன்ரோ, ஒக்.1

கனடாவின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் என முன்னணி நிதி ஆய்வு நிறுவனங்களில் ஒன்றான டெலொயிட் தெரிவித்துள்ளது. எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு நடுப்பகுதியளவில் பிரதான வட்டி வீதம் 3 ஆகக் குறைவடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதியில் வங்கி வட்டி வீதம் 3.75 ஆகவும் அடுத்த ஆண்டு நடுப்பகுதி அளவில் வங்கி வட்டி வீதம் 2.75 ஆகவும் குறைவடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, கனடாவில் வீடு ஒன்றை கொள்வனவு செய்வதற்கான குறைந்தபட்ச வருமான அளவு சராசரித் தொகை குறைவடைந்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. 12 நகரங்களில் இவ்வாறு வீடுகளின் விலைகள் குறைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)



# நேபாளத்தில் வெள்ளம்; உயிரிழப்பு அதிகரிப்பு!

காத்மண்டு, ஒக்.1

நேபாளத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 150 ஆக உயர்ந்துள்ளது. நேபாளத்தில் கடந்த சில நாள்களாகக் கனமழை பெய்து வருகிறது. அதனால் அங்குள்ள பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்த அனர்த்தத்தில் 62 பேர் காணாமல் போயுள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BID - PSDG Stamp Duty works & Council Fund works
# Urban Council, Vavuniya- 2024

**The Chairman, Procurement Committee (PC) on behalf of Urban Council, Vavuniya invite sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.**

| No | Contract No | Description of Work | TEC Cost (Mn) | | Contract Period | Required Grade | Required Bid Security: Security Amount | Required Bid Security: Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | NP/14/43(2)/06/WD/CF/46/2024 | Expenses necessary to be incurred for the Construction of boundary wall in Open stage in Vavuniya Region. | 4.24 | | 84 Days | C8 and C7 (Building) | 43,000.00 | 15.01.2025 |
| 2. | NP/14/43(2)/06/WD/CF/47/2024 | Expenses necessary to be incurred for the Improvement of Disable Facilities at Public Library, Vavuniya. | 1.92 | | 84 Days | C9 and C8 (Building) | 20,000.00 | 01.01.2025 |
| 3. | NP/14/43(2)/06/WD/CF/54/2024 | **Package - 10 - 2024** | | 2.43 | 84 Days | C8 and C7 (High way) | 25,000.00 | 15.01.2025 |
| | | Improvements to Velikulam 1st lane. | 0.76 | | | | | |
| | | Improvements to Velikulam 3rd lane. | 1.67 | | | | | |
| 4. | NP/14/43(2)/06/WD/CF/55/2024 | **Package - 11- 2024** | | 3.62 | 84 Days | C8 and C7 (High way) | 37,000.00 | 15.01.2025 |
| | | Improvements to Sankarapillai Veethy | 0.97 | | | | | |
| | | Improvements of Rampaikulam lane | 2.65 | | | | | |
| 5. | NP/14/43(2)/06/WD/CF/56/2024 | **Package - 12 - 2024** | | 1.90 | 84 Days | C9 and C8 (High way) | 19,000.00 | 01.01.2025 |
| | | Improvements to Kandy road 5th lane. | 0.54 | | | | | |
| | | Improvements to Kandy road 10th lane. | 0.35 | | | | | |
| | | Improvements to Kandy road 12th lane. | 0.36 | | | | | |
| | | Improvements to Kandy road 20th lane. | 0.28 | | | | | |
| | | Improvements to Thekkawathai 1st lane. | 0.37 | | | | | |
| 6. | NP/14/43(2)/06/WD/PSD Gst/43/2024 | Metalling & Tarring road work at Poonthoddam Periyaarkulam 1st lane (NVVUE064) | 1.95 | | 84 Days | C9 and C8 (High way) | 20,000.00 | 01.01.2025 |
| 7. | NP/14/43(2)/06/WD/CF/57/2024 | **Package - 13 - 2024** | | 2.11 | 84 Days | C8 and C7 (High way) | 22,000.00 | 15.01.2025 |
| | | Construction of gravelling for Rahupaakkam internal road. | 1.69 | | | | | |
| | | Improvements to Vairavarkovil 5th lane. | 0.42 | | | | | |

1. Bidding will be conducted through National competitive bidding Procedure (NCB). The Regional Preference shall be apply as stipulated in "Public Finance Circulars No.04/2016(ii), 04/2016(iii) and its amendments respectively will also be adopted."
2. To be eligible for contract award, the successful bidders shall not have been blacklisted and shall have been registered in the field of Road and Building Construction for grade mentioned in the table below with the institute for Construction, Training and Development (ICTAD) / Construction Industry Development Authority. .
3. Qualification requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Section 5 of the bidding document.
4. Interested bidders may obtain further information from Secretary, Urban Council, Vavuniya – (Telephone.No 024-2222275, fax- 024-2222736) and inspect the bidding documents at the address Urban Council, Vavuniya from any working days 9.00 hrs to 14.30 hrs till 15.10.2024.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Urban Council, Vavuniya from 02nd October 2024, until 15th October 2024 from 09.00 hrs to 14.30 hrs. Upon payment of a non-refundable fee of Three Thousand Rupees (Rs.3,000.00) for over 2 million estimated works and Two Thousand Rupees (Rs.2,000.00) for below 2 million estimated works. The method of payment will be by cash.
6. Bids shall be delivered to the address Secretary, Urban Council, Vavuniya on or before 10.30am hrs on 16th October 2024. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid up to 63 days (Sixty three, 18th December 2024) after the deadline for Bid Submission. [No.2, 5 & 6 Bids shall be valid up to 49 days (Forty Nine, 04th December 2024) after the deadline for Bid Submission].
8. Bids shall be accompanied by a bid security as per the information given in the table.
9. The pre bid meeting will be held on 08th October 2024 at 10.30 am at Urban council, Vavuniya Interested bidders may attend the pre bid meeting at their own expenses.

Secretary,
Urban Council,
Vavuniya.
01.10.2024

(CR/43318) J-1

## ஹிஸ்புல்லா அமைப்புக்கு புதிய தலைவர் அறிவிப்பு

பெய்ரூட், ஒக்.1

ஹிஸ்புல்லா இயக்கத்தின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா உயிரிழந்ததைத் தொடர்ந்து அந்த இயக்கத்தின் அடுத்த தலைவராக ஹஷேம் சஃபிதீன் அறிவிக்கப்பட்டுள்ளார். சஃபிதீன் சுமார் 32 ஆண்டுகள் ஹிஸ்புல்லாக்களின் தலைவராக இருந்த நஸ்ரல்லாவின் உறவினராவார்.

இஸ்ரேல் மேற்கொண்ட வான்வழித் தாக்குதலில் சஃபிதீனும் கொல்லப்பட்டுள்ளார் என்று முதலில் தகவல் வெளியான நிலையில், அவர் உயிருடன் உள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. நஸ்ரல்லாவைப் போலவே இருக்கும் சஃபிதீன் ஹிஸ்புல்லா அமைப்பில் ஆரம்பம் முதலே இணைந்து செயற்பட்டவராவார். ஈரானில் தனது கல்வியை நிறைவு செய்த அவர் 1990 ஆம் ஆண்டு மீண்டும் லெபனானுக்கு அழைக்கப்பட்ட போது அவர் நஸ்ரல்லாவின் வாரிசாக நியமிக்கப்பட்டார். 2017 ஆம் ஆண்டு அமெரிக்காவால் தீவிரவாதியாக அறிவிக்கப்பட்ட சஃபிதீன், ஹிஸ்புல்லாக்களின் அரசியல் விவகாரங்களை மேற்பார்வையிடுபவராக செயற்பட்டுவந்தார். இவர் சிரியாவை ஆதரித்ததற்காக சவுதி அரேபியாவால் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளார். (ஏ-இ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 20.11.1947 — மறைவு 28.09.2024

**திரு. ராசரத்தினம் முத்துரட்ணானந்தன்**

இமையாணன். உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் கொழும்பு. வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற பிரதி பொது முகாமையாளர் (CEB) திரு. ராசரத்தினம் முத்துரட்ணானந்தன். 2024 செப்டம்பர் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை இறைபதம் அடைந்தார். அன்னார் நிராவின் (ஜீவனீட்டா) அன்புக் கணவரும். நிரேஷின் பாசமிகு தந்தையும். ஜெமைமாவின் அன்பு மாமனாரும். ஜீவா. மறைந்த சின்னா. சுட்டி மற்றும் தங்கா ஆகியோரின் பாசமுள்ள சகோதரனும். பகிரதன். சுவேந்திரா. ருபேந்திரன் ஆகியோரின் மைத்துனரும். காலஞ்சென்றவர்களான வண. ஈ.டி. ராசரத்தினம் - நேசமணி தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான திரு. ஜோன் கனகரட்ணம் - ரோஸ்மலர் தம்பதியரின் மருமகனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 01.10.2024 இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை பார்வைக்காக ஜயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு. இறுதிக்கிரியை ஆராதனை 02.10.2024 நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று. பிற்பகல் 4 மணிக்கு பொரளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2025 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடை, பொதுமலசலகூடங்கள் என்பனவற்றை 2025.01.01ஆம் திகதி தொடக்கம் 2025.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 01.10.2024 – 14.10.2024 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 15.10.2024 பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 15.10.2024 பி.ப 2.00 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 12,562,000.00 | |
| 2 | சுன்னாகம் பொதுச் சந்தை வாகன தரிப்பிடம் | 1,000.00 | 10,000.00 | 526,500.00 | |
| 3 | உடுவில் கீளிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 198,000.00 | |
| 4 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை 01 | 1,000.00 | 10,000.00 | 3,945,700.00 | 250.00 |
| 5 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7,500.00 | 409,200.00 | 250.00 |
| 6 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 308,000.00 | 250.00 |
| 7 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 52,800.00 | 250.00 |
| 8 | கோழி உரித்தல் கடை இல 05 | 750.00 | 7,500.00 | 238,025.00 | 250.00 |
| 9 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 210,100.00 | 250.00 |
| 10 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 217,800.00 | 250.00 |
| 11 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 64,900.00 | |
| 12 | ஆலடிச்சந்தை | 750.00 | 7,500.00 | 112,000.00 | |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை | 3,000.00 | 30,000.00 | 31,477,800.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை வாகன தரிப்பிடம் | 1,000.00 | 10,000.00 | 2,839,200.00 | |
| 3 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 52,800.00 | |
| 4 | இணுவில் ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 961,400.00 | 250.00 |
| 5 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 304,700.00 | 250.00 |
| 6 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 66,880.00 | |
| 7 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 57,475.00 | |
| 8 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 387,200.00 | 250.00 |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 2,376,000.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 363,000.00 | 250.00 |
| 3 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 38,475.00 | 250.00 |
| 4 | ஏழாலை மயிலங்காடு பொதுச்சந்தை | 750.00 | 7,500.00 | 593,755.00 | |

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2024.10.25ம் திகதிக்கு முன்னரும் ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2024.10.25ம் திகதிக்கு முன்னரும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
4. அரசினால் வரி விதிக்கப்படும் பட்சத்தில் அத்தொகையும் செலுத்தப்படவேண்டும்
5. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
6. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொத்தியாலடி கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும் அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
7. பொது மலசல கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
8. கேள்விப் பத்திரங்களை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு மூலப் பிரதியினை **"செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். மறுபிரதியினை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
9. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
10. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது
11. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
12. கேள்வி தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. சந்தைச் சுற்றாடலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
14. இணுவில் வாராந்தச்சந்தை வருமானங்களை ஈட்டும் வேறு தேவைகளுக்கு பயன்படுத்தும் போது சமுர்த்தி வங்கிக்கு அருகிலுள்ள கட்டடத் தொகுதியில் நடாத்தப்படவேண்டும்.
15. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**திருமதி சாரதா உருத்திரசம்பவன்**
**செயலாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

01.10.2024

(CR/43319) J-1




# அநுரவின் சுயரூபம் விரைவில் தெரியும்

*முன்னாள் சகா விமல் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 1

கோத்தாபய நிர்வாகத்தில் காணப்பட்டது போல் ஒவ்வொரு புதிய அரசாங்கமும் தேனிலவு காலத்தை அனுபவிக்கிறது. எனினும் இந்த அரசாங்கத்தின் உண்மையான தோற்றம், காலப்போக்கில் வெளிப்படும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ விமர்சித்துள்ளார்.

'ஜே.வி.பி. என்ற மக்கள் விடுதலை முன்னணி, இன்று தேசிய மக்கள் சக்தியாக வளர்ச்சியடைந்துள்ளது. ஜே.வி.பி.க்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இடையிலான வேறுபாடு தெளிவாகத் தெரிகிறது. எனினும், நாட்டை முன்னேற்றுவதற்கு தேசிய மக்கள் கட்சி நடவடிக்கை எடுக்கும் என நம்பிக்கை உள்ளது. ஜே.வி.பி. எமது முன்னாள் கட்சியாக இருந்தப்படியால், தற்போதைய அரசாங்கத்தின் தேசத்தை உயர்த்துவதற்கான முயற்சிகளுக்கு எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை' என்றும் விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-இ)



# மருத்துவமனை மீது ரஷ்யா தாக்குதல்

*10 பேர் உயிரிழப்பு*

கீவ், ஒக்.1

வடகிழக்கு உக்ரைனில் உள்ள சுமி நகரில் உள்ள மருத்துவமனை மீது ரஷ்யா கடந்த சனிக்கிழமை அதிகாலை தாக்குதல் நடத்தியதில் 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த தாக்குதலில் குறைந்தது 22 பேர் காயமடைந்தனர் என்று உக்ரேனிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாக்குதல் நடந்த நேரத்தில் 86 நோயாளிகள் மற்றும் 38 ஊழியர்கள் மருத்துவமனையில் இருந்தனர் என்றும் உக்ரேனிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைனில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் கண்காணிப்புப் பணியகத்தின் தலைவர் டேனியல் பெல், 45 நிமிட இடைவெளியில் இரண்டு தாக்குதல்களில் செயிண்ட் பான்டெலிமோன் மருத்துவமனை தாக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார். அதேவேளை, இதுவரை சுமி நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 33 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 132 பேர் காயமடைந்துள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் ஆண்டு நினைவுநாள்

மண்ணில்
15 . 07 . 1939



விண்ணில்
15 . 10 . 2020

**அமரர் கந்தர் வயித்திலிங்கம் இராசதுரை**

**(ஓய்வுநிலை சாலைப் பரிசோதனைக்குழு பொறுப்பதிகாரி**
**இ.போ.ச. கோண்டாவில் சாலை)**
**திதி:அபரபக்க சதுர்தசி 01.10.2024**

அன்பின் அப்பா
அழியாத ஓவியமே
அழைத்துவிட்டாரோ
ஆண்டவன் தம்முடனே
ஆண்டுகள் நான்கானதுவோ
ஆண்டுகள் பல கடந்தாலும்
எம்நினைவில் என்றும்
எம்முடனே வாழ்வீர்கள்!

***உங்கள் ஆன்மா சாந்தியடைய எம்குலதெய்வம் ஐயனாரை வேண்டிநிற்கும்***

**இல.283,**
**காங்கேசன்துறை வீதி,**
**சுன்னாகம்.**

**அன்பு மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(CR43315)A-1

# லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் ஒரு மில்லியன் மக்கள் இடம்பெயர்வு



பெய்ரூட், ஒக்.1

லெபனான் மீது இஸ்ரேல் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் வான்வழித் தாக்குதல்கள் காரணமாக ஒரு மில்லியன் மக்கள் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேறியிருக்கலாம் என்று அந்தநாட்டின் பிரதமர் கூறியுள்ளார்.

பெய்ரூட்டில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லாவை இஸ்ரேல் படுகொலை செய்த இரண்டு நாள்களுக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் 50க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

யேமனில் ஹவுதி இயக்கத்தின் இராணுவ இலக்குகள் மீது 'பெரிய அளவிலான' வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது. அதேவேளை, வடக்கு இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா ஏவுகணைத் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

**சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

## தேவை

## மாணவர் விடுதி மேற்பார்வையாளர்

**தகைமை** : க.பொ.த. (சா/த) அல்லது அதற்கு மேற்பட்டது.
**வயது** : 30 வருடங்களுக்கு மேல்
விடுதியில் தங்கி பணிபுரிவது விரும்பத்தக்கது.

**விண்ணப்ப முடிவுத் திகதி 2024.10.11** விண்ணப்பங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாக அலுவலகத்திலோ சமர்ப்பிக்கவும்.

**அதிபர்,**
**சுண்டுக்குளி மகளிர் கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**

## விற்பனைக்கு

யாழ் மாவிட்புரம் கோயிலுக்கு அண்மையில் 60 பரப்புக் காணியும். யாழ் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 5 பரப்புக் காணியும். யாழ் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும். யாழ் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் சுற்று மதிலுடன் 2 1/2 பரப்புக் காணியும். யாழ் திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் சந்தைக்கு முன்பாக 1 1/2 பரப்பில் அமைந்த வீடும். யாழ் மாநகர சபைக்கு முன்பாக குறோஸ் வீதியில் 10 பரப்புக் காணியும். யாழ் மின்சார நிலைய வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 1 1/2 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. ஊர்காவத்துறை சுருவில் வீதியில் 15 பரப்புகாணி பழைய இலங்கை வங்கிக்கு அருகில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: **077 723 2535**

# ஆளுநரிடம் இனிமேல் நேரில் முறையிடலாம்

*யாழ்ப்பாணம், ஒக். 1*

பொதுமக்கள் தங்களின் முறைப்பாடு களை வடமாகாண ஆளுநரிடம் நேரில் வழங்கக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு ஆளுநரில் குறைகேள் மன்றமாக இருந்த 'அபயம்' பிரிவின் செயற்பாடுகள் நேற்றுமுதல் நிறுத்தப்பட்டுள்ள

நிலையிலேயே, பொதுமக்கள் அலுவலக நேரத்தில் தங்களின் முறைப்பாடு களை ஆளுநரிடம் நேரில் முன்வைக்க முடியும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம)

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

# பெறுகை அறிவித்தல்.

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக்கொண்ட குடிசார் வேலைகளுக்கான பெறுகை பின்வருமாறு அட்டவனைப்படுத்தப்படுகிறது.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டுத் தொகை(ரூபா) (வரி நீங்கலாக) | ICTAD தர பதிவு | பிணைப்பணம்.'. காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1 | KN/DPS/DO4/DCB/ 24-11/165-1 | Construction of Auditorium in Vaddakachchi Maha Vidyalayam in Kilinochchi District Phase 11 | 12.3 மில்லியன் | C7,C6 & 5 Building | ரூபா 120,000/- 30.12.2024வரை | 3500.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல விலைக்கோரலாளர்களாலும் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப்பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II. இக்சாட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (ii) இலக்க 08.05.2019 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு 5% முன்னுரிமையளிக்கப்படும்.
   IV. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்றவேலைச் செயற்றினுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அட்டவனைப்படுத்தப்படாமலிருத்தல் வேண்டும்
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285663. பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை 02.10..2024 ஆம் திகதியிலிருந்து 14.10.2024 ஆம் திகதிவரை முற்பகல் 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை வேலைநாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இப்பெறுகை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting ) 09.10..2024 ஆம் திகதி முற்பகல் 12.00 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
5. இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி. பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட, பெறுகை ஆவணங்களையும் கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணங்களையும் சகல பெறுகை ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு அமைவாக ஒப்படைத்தல் வேண்டும்.
6. முத்திரையிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் யாவும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "KN/………………………" என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு 15.10..2024 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்குமுன் கிடைக்கப்பெற கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் யாவும் உடனடியாக திறக்கப்படும். பெறுகைகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
7. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**திரு சு.முரளிதரன்**
**திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவர்/மாவட்டச் செயலாளர்.**
**கிளிநொச்சி மாவட்டம்**

(CR/43314) J-1

# பண மோசடியால் கைதானார் பெண்


கொழும்பு, ஒக். 1

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்ததாகக் கூறப்படும் பெண் ஒருவர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான பெண் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனமொன்றை நடத்தி வந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் பஞ்சவர்ணம்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி**

(தேவி அச்சகம் ஸ்தாபகர் மூர்த்தி விளம்பர சேவை)

மலர்வு 15.03.1936 உதிர்வு 28.09.2011

திதி : சதுர்தசி 01.10.2024

அன்பு அப்பா!
கண்மூடித் திறக்கமுன்பு 13 ஆண்டுகள்
நடந்து விட்டது எங்கள் நெஞ்சக்கூட்டில்
அழியாத ஓவியம் நீங்கள் அப்பா.
பாசத்தின் நிலைகுடமாய் பரிவுடன் எமை வளர்த்து
வாழ்வின் பாதைக்கு வழிகாட்டிய அன்புத் தெய்வதே
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் ஆறாது எம் சோகம்
உங்கள் நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல மாரியம்மனை துணை வேண்டி நிற்கும்

**அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.**

114/19, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.



# இணுவிலில் சிறப்புற்ற வசந்த விழா நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஒக். 1

இணுவைத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் வசந்தவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இணுவில் அறிவாலய மண்டபத்தில் இணுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப்புலவர் ச.முகுந்தன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியல்துறைப் பேராசிரியர் கந்தையா ஶ்ரீகணேசன் சிறப்பு விருந்தினராகவும், முருங்கன் நெல் ஆராய்ச்சி நிலைய விவசாய ஆராய்ச்சிப் பிரிவு உதவி விவசாயப் பணிப்பாளர் கலாவித்தகர் அழகேசன் அமிர்தலோஜனன், உடுவில் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி.விஜிதா செல்வகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

காலை 8.15 மணியளவில் விருந்தினர்களை வரவேற்று இணுவில் கந்தசுவாமி ஆலயத்திற்குச் செல்லும் முகப்பு வாயிலில் பண்பாட்டு ஊர்வலம் ஆரம்பமானது. பண்பாட்டு ஊர்வலம் இணுவில் அறிவாலயத்தைச் சென்றடைந்ததைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், தேவாரம், தமிழ்த்தாய் இசைத்தலுடன் காலை 9 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமானது. இணுவிலைச் சேர்ந்த குமார சரவணபவக்குருக்கள் ஆசி உரை நிகழ்த்தினார்.

நிகழ்வில் இணுவைத் தமிழ்ச் சங்கம் யாழ்.மாவட்ட ரீதியாகப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடாத்திய கட்டுரை, சித்திரம், தனி நடிப்பு, பேச்சு போன்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. வெற்றியீட்டிய மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

(ம-66)

# INVITATION FOR BID 2024/07
## Regional Directorate of Health Service Jaffna.

1. The Chairman, Regional Procurement Committee (RPC) on behalf of Regional Director of Health Services Regional Directorate of Health Services,Health village Pannai, Jaffna.,invites sealed bids from eligible and qualified bidders bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
   "Bidding will be conducted through National Competitive Bidding Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents.
5. Interested bidders may obtain further information from address given below in 7 and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna. (T.P:0212227889, Fax: 0212220822) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table

| CATEGORY II | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 01.10.2024 until 11.10.2024 |
| | Pre-Bid Conference | At 2.30 P.M on 08.10.2024 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 14.10.2024 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| NP/04/41/2024/PSDG/W/01 | Renovation of Maternity ward at Base Hospital Kayts,Jaffna. | 1.86 | 78Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 19,000.00 | Till 30.12.2024 |
| NP/04/41/2024/PSDG/W/05 | Renovation of NO Quarters at Base Hospital Tellippalai,Jaffna | 0.72 | 63Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 7,500.00 | Till 30.12.2024 |
| NP/04/41/2024/PSDG/W/03 | Renovation of Staff Quarters at Base Hospital Kayts,Jaffna. | 2.54 | 84Days | C8 and C7 (Buildings) | 3,500.00 | 26,000.00 | Till 13.01.2025 |
| NP/04/41/2024/PSDG/W/04 | Repair of Ward block 02 (Completion of Structural repair work) Phase II at Base Hospital Kayts,Jaffna. | 3.50 | 84Days | C7and C8 (Buildings) | 3,500.00 | 35,000.00 | Till 13.01.2025 |
| NP/04/41/2024/LM/W/05 | Renovation of Dental Unit DH VAddukkoddai. | 1.36 | 74Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 14,000.00 | Till 30.12.2024 |
| NP/04/41/2024/LMW/06 | Extension of Two Storied Building for OPD Block (Completion of Ground floor)- DH Vaddukkoddai. | 9.10 | 127Days | C7and C6 (Buildings) | 3,500.00 | 91,000.00 | Till 27.01.2025 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service,**
**Jaffna.**

(CR/43320) J-1

## சிறுவர்தின நிகழ்வு

கொடிகாமம், ஒக. 1

வரணிக் குடும்ப முன்பள்ளிகளின் சிறுவர்தின நிகழ்வும் முதியோர் கௌரவிப்பும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வரணி மத்திய கலாசார நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு . 05 . 05 . 1949



இறப்பு . 29 . 09 . 2024

## செல்வி சாரதா சண்முகதாசன்

சாரதாசண்முகதாஸ் அவர்கள் கடந்த 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்வராணி மற்றும் பற்குணன், கிருஷ்ணதாசன், கோகிலா அவர்களின் அன்புச் சகோதரியும், அமிர்தலிங்கம், கோமதி, செந்திரு, மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2024) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரின் பூர்வீக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆசிரியர் (பெரியரசடி வீதி),**
**சாங்கத்தானை, சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 43322) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் . 21 . 01 . 1954



மறைவு . 30 . 09 . 2024

## கோவிந்தசாமி சண்முகநாதன்

மீசாலை தெற்கு மீசாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தசாமி சண்முகநாதன் அவர்கள் நேற்று (30.09.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தசாமி - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பேரம்பலம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அமிர்தலோஜினி (ராணி) அவர்களின் அன்புக் கணவரும், வாகுலன் (பொறியியலாளர்), ரஜிகுலன் (கனடா), கீர்த்தனா ஆகியோரின் அன்புத் தந்தையும், மேனகா (ஆசிரியர், கிளி/செல்வா நகர் வித்தியாலயம்), கஜானா, கஜானன் (அஞ்சல் அலுவலகர், பண்டத்தரிப்பு அஞ்சல் அலுவலகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சத்விகா, புவிசாந், தேசனா ஆகியோரின் அன்பு பேரனும், செல்லமுத்து, வேதவனம், இராசையா, மனோன்மணி, காலஞ்சென்ற அற்புதநாதன், சறோஜினிதேவி, செல்வராணி, சுதந்திரநாதன் மற்றும் காலஞ்சென்ற புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கோகுலநாதன் மற்றும் இராஜேஸ்வரி, ஞானாம்பிகை, கோஇளமுருகேசலிங்கம், மங்களஜோதி, ஜெகதீசன், சிவசோதி, விஜயலட்சுமி, செயந்திரராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**தொ.இல:0777581422**

(CS 1494) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் . 28 . 08 . 1965



மறைவு . 30 . 09 . 2024

## காளிமுத்து கணேசன்

**(உரிமையாளர் - நீலாம்பரி மங்கள சேவை)**

அப்பையா ஒழுங்கை, கேணியடி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த காளிமுத்து கணேசன் நேற்று (30.09.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காளிமுத்து-இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பற்குணம் தம்பதியினரின் அன்பு மருமகனும், தீபணியின் அன்புக் கணவரும், லக்ஷிகா, பத்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சஜிந்தன், மணிவண்ணன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நைனேஷின் ஆசைத்தாத்தாவும், சுந்தர்ராஜா, பொன்னுச்சாமி, லஷ்மி, மகேஸ்வரி, குருசாமி, நாகராஜா, குமரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2024) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.


**அப்பையா ஒழுங்கை,**
**கேணியடி, கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 1465)

# மரண அறிவித்தல்

மண்ணில் 04 . 12 . 1980



விண்ணில் 29 . 09 . 2024

## அமரர் அருந்தவராசலிங்கம் திவாகரன் (பத்தன்)

**(திட்டமிடல் ஒருங்கிணைப்பாளர் (BHA) கிளிநொச்சிக்கிளை-வேள்ட்விசன்)**

யாழ்ப்பாணம் உடுப்பிட்டி இலக்கணவத்தையைப் பிறப்பிடமாகவும் குருமன்காடு, 8ம் ஒழுங்கை நெளுக்குளம் வவுனியாவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட அமரர் அருந்தவராசலிங்கம் திவாகரன் (பத்தன்) அவர்கள் கடந்த (29.09.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அமரர் செல்லப்பா அருந்தவராசலிங்கம்-மற்றும் இந்திராணி தம்பதியின் அன்பு மகனும் பிறேமலீலா (பிரான்ஸ்), குணாகரன் (பொது வைத்தியசாலை-வவுனியா), நர்மிளா ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகேஸ்வரன் (பிரான்ஸ்), மயூரன் (Dialog யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கேசிகன், லதுர்சிகன் ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நெளுக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 920 6021**

(CR 42690) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவின் வர்த்தமானி வழமையானதொன்றே

## பாதுகாப்பு அமைச்சின் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 1

பொதுமக்களின் பாதுகாப்புக்காகவே முப்படையினரை வரவழைத்து ஜனாதிபதியால் அண்மையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. அது வழமையானது. இவ்வாறு பாதுகாப்புச் செயலர் எயார் வைஸ் மார்சல் சம்பத் துயகொண்டா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் இது வழமையான நடைமுறையாகும். அவசரகாலச் சட்டம் இல்லாவிட்டாலும், பொதுமக்களின் பாதுகாப்புக்காக முப்படையினரை வரவழைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. இது முற்றிலும் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும் வழமையான வர்த்தமானியாகும். இருப்பினும் சமூக வலைதளங்களில் இது அதிகமாக பகிரப்பட்டு வருகிறது. மேலும், இலங்கைக்கு ஏற்படக்கூடிய அனைத்து வகையான அச்சுறுத்தல்களும் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளன. பொதுமக்கள் தற்போது பல வழக்கத்துக்கு மாறான அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி வருகின்றனர் - என்றார். (ஒ-இ)

### கசப்புகளைத்...

இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கொழும்பில் நேற்று ஒன்றேகால் மணி நேரம் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போது நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை தமிழ்த் தரப்புகள் எப்படி எதிர்கொள்ளப் போகின்றன என்பது தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, அந்தக் கட்சியின் சின்னத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னர் கூட்டமைப்பாக சந்தித்ததைப்போன்று எதிர்கொள்வதற்காக அழைப்பு விடுத்திருந்தது. ஆனால், கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களாலேயே கூட்டமைப்பாகச் செயற்படமுடியாமல் போனதையும், தமிழரசுக் கட்சி அதிலிருந்து வெளியேறியதையும் இந்தியத் தூதுவருக்கு சந்திப்பில் கலந்துகொண்ட ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்கள் கூறியுள்ளனர்.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் பங்கேற்ற பதில் செயலர், கடந்த காலங்களில் கசப்புணர்வுகள் இருந்ததை ஏற்றுக்கொண்டதுடன் அதை எதிர்காலத்தில் பேசித்தீர்த்து ஒற்றுமையாகப் போட்டியிடவேண்டும் என்று கூறியுள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை ஒன்றாக எதிர்கொண்டால் மாத்திரமே தமிழ்த் தேசியக் கட்சிகளால் பலமான நிலையை அடையமுடியும் என்பதை கூட்டத்தில் பங்கேற்ற கட்சித் தலைவர்கள் ஒப்புக்கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் அதன் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, பதில் செயலர் ப.சத்தியலிங்கம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.சிறீதரன், ரெலோ சார்பில் கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் சார்பில் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் இந்தச் சந்திப்புக்கு அழைப்பு விடுத்தும் கலந்துகொள்ளவில்லை. (அ-ஒ-5)

### அதிகாரப்...

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் நேற்றையதினம் தமிழ்த் தேசியக் கட்சியினரை இந்தியத் தூதுவர் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இந்தச் சந்திப்பின்போது தற்போது பதவியேற்றுள்ள தேசிய மக்கள் சக்தியின் அநுர தலைமையிலான அரசாங்கம் தொடர்பில் தமிழ்க் கட்சித் தலைவர்களின் நிலைப்பாடுகளைத் தூதுவர் கேட்டுள்ளார். இதன்போதே, அதிகாரப் பகிர்வை அநுரவின் அரசாங்கம் தரும் என்ற நம்பிக்கை இல்லை என்று தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் பின்னர், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி அநுர குமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறும் சாத்தியம் இருப்பதாக பல தரப்பினரும் கூறுவதாக இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இதற்கு தமிழ்த் தலைவர்கள், தேசிய மக்கள் சக்தி என்று சொல்லிக்கொண்டாலும் அவர்கள் அடிப்படையில் ஜே.வி.பி.யினர்தான். அவர்கள் அதிகாரப் பகிர்வுக்கு எதிரானவர்கள். இப்போதும் அதே மனநிலையில்தான் இருக்கின்றார்கள். ஆனால், மாகாணசபைத் தேர்தலை நடத்துவோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். அதைச் செய்வார்களா என்ற கேள்வி எங்களிடம் இருக்கின்றது.

இவற்றுக்கு மேலாக அவர்கள் இந்தியாவுக்கு எதிரானவர்கள். சீனச் சார்புப் போக்குடையவர்கள். அநுரகுமார தலைமைத்துவம் ஏற்றதன் பின்னர் அவர்கள் அதே நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள் என்று சொல்லமுடியாது. சில விடயங்களை உணர்ந்திருக்கின்றார்கள்.

ஆனாலும், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பார்கள் என்று நம்பவில்லை. அவர்கள் புதிய அரசமைப்பு ஊடாகப் பிரச்சினையைத் தீர்ப்போம் என்கிறார்கள். அவர்களால் நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று நாங்கள் நம்பவில்லை. அவர்கள் சாதாரண பெரும்பான்மையை வேண்டுமானால் பெற்றுக்கொள்வார்கள் என தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்குப் பதிலளித்துள்ள இந்தியத் தூதுவர், எம்முடன் பேசிய பலரும் தேசிய மக்கள் சக்தியினர் நாடாளுமன்றத் தேர்தலில் சாதாரண பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வார்கள் என்றுதான் கூறுகின்றார்கள் எனத் தெரிவித்துள்ளார். (அ-ஒ-5)

### அநுர...

என்றும் பரீட்சை மீண்டும் நடத்தப்படாது எனவும் கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி நேற்று அறிவித்திருந்தார். இதையடுத்தே, அரசாங்கத்தின் இந்த முடிவை ஏற்கமுடியாது என்றும் பரீட்சையை மீண்டும் நடத்தவேண்டும் எனவும் வலியுறுத்தி பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர் நேற்று இசுறுபாய கல்வி அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எட்டு வினாக்கள் பிரச்சினைக்குரிய விடயங்களாக உள்ள நிலையில், வெறும் மூன்று வினாக்கள் தொடர்பான விடயங்களுக்கே அரசாங்கம் தீர்வைத் தந்துள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-ம-சி)

### தபால்...

தபால் மூலம் வாக்களிக்க விரும்புவோர் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-சி)

### நாடாளுமன்றத்...

ஒன்றிணையுமாறு தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் அண்மையில் அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும், அந்த அழைப்பை அந்தந்தக் கட்சிகள் மறுத்துள்ள நிலையிலேயே, கட்சிகள் ஒன்றிணைய வராவிட்டால் தமிழரசுக் கட்சி தனித்துத் தேர்தலை எதிர்கொள்ளும் என்று சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்கு இன்னும் சிறிது காலமே உள்ளது. எனவே, நாங்கள் விரைவாகச் செயற்படவேண்டியுள்ளது. கட்சிகளை ஒன்றிணையுமாறு விடுத்த அழைப்பு ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால் வேட்பாளர்களைத் தீர்மானிப்பதற்காக நாங்கள் அமைத்த குழு அடுத்த விடயங்களைத் தீர்மானிக்கும். நாங்கள் தேர்தலைத் தனித்து எதிர்கொள்வோம்.

எதிர்வரும் தேர்தலில் இளைஞர்கள், யுவதிகள், ஆற்றல் உள்ளவர்களுக்கு வாய்ப்பு வழங்கவேண்டும் என்பதுடன் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்து மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதில்லை என்ற தீர்மானத்தையும் மேற்கொண்டுள்ளோம் - என்றார். (அ-ம-27)

### கீரிமலை...

போன்ற காரணங்களால் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் இன்றுமுதல் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கின்றன. இரவு 7.15 மணிக்கு கீரிமலையிலிருந்து புறப்படும் பேருந்து காங்கேசன்துறை, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை ஊடாக பருத்தித்துறையைச் சென்றடைந்து பருத்தித்துறையிலிருந்து, மந்திகை, மாலுசந்தி, நெல்லியடி, துன்னாலை ஊடாக வவுனியா, அநுராதபுரம், புத்தளம், சிலாபம் வழியாக கொழும்பைச் சென்றடையவுள்ளதாக பருத்தித்துறை சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சேவையைப் பயன்படுத்த விரும்பும் பொதுமக்கள் இணையம் மூலமாகவும் முன்கூட்டிய பதிவுகளை மேற்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-66)

### காணாமலாக்கப்...

பட்டுள்ளது. 'காணாமலாக்கப்பட்ட எங்கள் குழந்தைகள் எங்கே' என்ற தொனிப்பொருளின் கீழ் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. (அ-ம-113)

### தமிழ்மக்கள்...

யாழ்ப்பாணத்தில் நேற்றுத்திங்கட்கிழமை இடம்பெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்மக்கள் கூட்டணி, தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்புடன் இணைந்து சங்குச் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவாகச் செயற்பட்டது. எனினும், பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்குத்

தீர்மானித்துள்ளதாக தமிழ்மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (அ-ம-66-26-20)

### தமிழரசுக்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் முன்னைய காலங்களைப்போல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் போட்டியிடுவது தொடர்பில் பேசப்பட்டது. அதற்குப் பங்காளிக் கட்சிகள் இணங்கிவராவிட்டால் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவது என்று முடிவெடுக்கப்பட்டது. அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால் கொழும்பிலும் தமிழரசுக் கட்சி போட்டியிடவேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைத்தேன். நாளைமறுதினம் இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் - என்றார். (அ-ஒ-27)

### கைக்குண்டுகளுடன்...

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையின் போதே இந்த இரண்டு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 18 மற்றும் 24 வயதுடைய இரு இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்களிடம் இருந்து 2 கைக்குண்டுகள், 4 வாள்கள், 4 பெற்றோல் குண்டுகள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-20)

### எரிபொருள்...

பட்டு 319 ரூபாவாகவும், மண்ணெண்ணை 19 ரூபாவால் குறைக்கப்பட்டு 183 ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒக்ரேன் 95 பெற்றோல் விலையில் மாற்றம் ஏற்படவில்லை. (அ-ஒ-இ)

### 104 கிலோ..

மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ஒ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானசாலையை இடம் மாற்றுமாறு
# மன்னாரில் மக்கள் போராட்டம்




**மன்னார், ஒக்.1**

**மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் எழுத்தூர் சந்திக்கு அருகாமையில் புதிதாகŸத் திறக்கப்பட்டுள்ள மதுபானசாலையை உடனடியாக இடமாற்றக் கோரி நேற்றுப் பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.**

மதுபானசாலைக்கு முன்பாகக் கூடிய ஆண்கள், பெண்கள்,வயோதிபர்கள் என பல நூற்றுக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மதுபானசாலை அமைந்துள்ள பகுதியில் மக்களின் குடியேற்றம், இளைஞர் பயிற்சி நிலையம், ஆடைத் தொழிற்சாலை, பள்ளிவாசல் ஆகியவை காணப்படுகின்றன என்றும், அதனால் மதுபானசாலையை இடமாற்ற வேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

சம்பவ இடத்துக்கு வந்த மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் மக்களுடன் கலந்துரையாடினார். எனினும் மன்னார் மாவட்டச் செயலர் அங்கு வர வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை முன்வைத்தனர். அதையடுத்து மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் அங்கு சென்று மக்களுடன் கலந்துரையாடினார்.

மதுபானசாலையை பிரதேச செயலாளர் அல்லது மாவட்டச் செயலரோ இடமாற்ற நடவடிக்கை எடுக்க முடியாது என்றும், மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஊடாகவே நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் தெளிவுபடுத்திய மாவட்டச் செயலர், இந்தவிடயத்தை மதுவரித் திணைக்கள ஆணையாளர் மற்றும் ஜனாதிபதியின் கவனத்துக்குக்கொண்டு செல்வதாக உறுதியளித்தார்.

தங்கள் கோரிக்கை அடங்கிய மனுவை மாவட்டச் செயலரிடம் கையளித்த பொதுமக்கள், போராட்டத்தை இடைநிறுத்திக் கலைந்துசென்றனர். மதுபானசாலையை திறக்க அனுமதிக்கவேண்டாம் என்று கடந்த மாதமும் மன்னார் மாவட்டச் செயலகம் முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர். (எ-56)

# அரசியலில் இருந்து கடவுளை விலக்குக

## திருப்பதி லட்டு விவகாரத்தில்
## உச்ச நீதிமன்றம் அறிவுறுத்து

புதுடில்லி, ஒக். 1



கடவுள்களை அரசியலில் இருந்து விலக்கி வைக்க வேண்டும் என்றும் மக்களின் மத உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும் திருப்பதி லட்டு தொடர்பான வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஆந்திர முதல்வராக ஜெகன்மோகன் ரெட்டி இருந்தபோது, திருப்பதி லட்டு தயாரிக்க கொள்முதல் செய்யப்பட்ட நெய், கலப்படமானதாக இருந்ததாக தற்போதைய முதல்வர் சந்திரபாபு நாயுடு குற்றஞ்சாட்டியுள்ளார். அத்துடன், திருப்பதி லட்டின் உள்ளீட்டில் விலங்குகளின் கொழுப்பு இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக பா.ஜ.க.வின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். இந்த மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இதன்போது, 'லட்டு தயாரிப்பில் கலப்பட நெய் பயன்படுத்தப்பட்டது என்பதற்கு என்ன ஆதாரம் உள்ளது?' என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கேட்டனர். இதற்கு திருப்பதி தேவஸ்தானம் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், 'இது தொடர்பாக விசாரணை நடத்தி வருகிறோம்' என பதில் அளித்தார். 'அப்படியானால் உடனடியாக இதுகுறித்து ஏன் பத்திரிகைகளுக்கு தெரிவிக்க வேண்டும்? மத உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்' என்று நீதிபதிகள் தெரிவித்தனர். அரசியல் சாசனப் பதவிகளை வகிப்பவர்கள், கடவுள்களை அரசியலில் இருந்து விலக்கி வைக்க வேண்டும். இதனை நீதிமன்றம் எதிர்பார்க்கிறது என்றும் நீதிபதிகள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம)

# இலங்கை அணி
## பயிற்றுவிப்பாளராக
## சனத் ஜெயசூரிய

இலங்கைக் கிரிக்கெட் அணிக்கான பிரதான பயிற்றுவிப்பாளராக சனத் ஜெயசூரிய ஒருவருட காலத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளா ரென இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி கடந்த இரண்டு மாதங்களாக இங்கிலாந்து, இந்தியா மற்றும் நியூஸிலாந்து ஆகிய நாடுகளோடு கலந்துகொண்ட 3 போட்டிகளின்போதும் சனத் ஜெயசூரியவே பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றியிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-சி)

**பணிப்பெண் தேவை**
வவுனியாவில் உள்ள வீடொன்றிற்கு பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 925 2976

**A/L-2026**
**கலை, வர்த்தகம்**
புதிய பிரிவு
ஆரம்பம்
05.10.2024
சனி காலை 9.00 மணி
**DMI**
Jaffna
தொடர்பு: 077 848 0604
(CS 29019) V-1

**அறைகள் வாடகைக்கு உண்டு**
யாழ் இந்துக்கல்லூரிக்கு அண்மையில் பெண்களுக்கான அறைகள் வாடகைக்கு உண்டு. குழுவாக விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
077 468 2560
(CS 1490) V-1

**வேலைவாய்ப்பு**
யாழ்ப்பாணம்.1 ம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள பிரபல Online Products நிறுவனம் ஒன்றுக்கு வாடிக்கையாளுடன் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு ஆடர்களை பெற்றுகொள்ள பெண் பணியாளர் தேவை.
மும்மொழிகளும் சரளமாக பேசத்தெரிந்திருத்தல் அவசியம்.
(கண்டிப்பாக சிங்களம் சரளமாக உரையாடவேண்டும்) அலுவலகதிற்கு வந்து பணியாற்ற வேண்டும்.
வேலை நேரம் : (8.30 am to 6. 30 pm)
சம்பளம் : நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
திறமை அடிப்படையில் கவர்சிகரமான சம்பளம் வழங்கபடும்.
சுய விபர கோவையை What's App இலக்கத்திற்கு அனுப்பவும்.
தொடர்பு: 077 870 2188

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் பிரதான வீதி முகப்புடன் 50 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு
- யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான காப்பற் வீதி
- அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமை
- சர்வதேச ஆங்கில பாடசாலை அருகாமையில்
- பெற்றோல் செட் திருமண மண்டபங்கள் வியாபார நிலையங்கள் வீடுகள் அமைக்க உகந்த காணி.
- நன்னீர் ஊற்று நிலம்
- 5 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- சீரான ஆவணங்கள்
- யாழ்நகரில் இருந்து 4 km தூரத்தில்

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
தொடர்புகளுக்கு:
077 030 2523
(CS 1491) V-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.10. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.